# சிவகங்கை நகராட்சி

## அவசரக்கூட்டம்

2019ம் ஆண்டு நவம்பர் 21ம் நாள் விகாரி வருடம் கார்த்திகை 5ம் நாள் வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு தனி அலுவலர் தலைமையில் அவசரக்கூட்ட நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

**தலைமை திரு.பி.அயூப்கான், பி.காம்.,எம்.ஏ.,பி.எட்.,**

**ஆணையாளர் (ம) தனி அலுவலர்,**

**சிவகங்கை நகராட்சி.**

# <u>பொருள்கள்</u>

1. சிவகங்கை நகராட்சியில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடைத்திட்டத்தில் ஏற்கனவே சிப்பம் 1 பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் குழாய்கள் மற்றும் ஆள் இறங்கும் குழிகளில் ஏற்பட்டுள்ள அடைப்பை சரிசெய்து பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே சிப்பம் 1 ல் உள்ள கழிவுநீர் குழாய்கள் மொத்தம் 4.66 கி.மீ துரம் மற்றும் 1849 எண்ணிக்கை உள்ள ஆள் இறங்கும் குழிகளில் உள்ள அடைப்பை சரிசெய்வதற்கும், 1849 ஆள் இறங்கும் குழிகளை 30செ.மீட்டரிலிருந்து 70 செ.மீட்டர் அளவிற்கு உயரப்படுத்தவும், 562.8 ச.மீ அளவிற்கு பேவர் பிளாக் சாலைகளை சீர்செய்வதற்கும் ஆகும் கூடுதல் செலவினத்தொகைக்கு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்க செயற்பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், காரைக்குடி அலுவலகத்திடமிருந்து 06.11.2019 அன்று கடிதம் வரப்பெற்றது. மேலும் இது சம்மந்தமாக உதவி செயற்பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சிவகஙகை அவர்களின் கடித ந.க.எண்..151119/F.SVG/AEE/2019 நாள்..15.11.2019 ஆம் தேதியிட்ட கடிதத்தின் மூலம் ரூ.5.37 கோடிக்கு உத்தேச மதிப்பீடு அனுப்பி வைக்கப்பட்டு மன்ற பொருள் கோரப்பட்டுள்ளது. எனவே கழிவுநீர் குழாய்கள், ஆள் இறங்கும் குழிகளில் உள்ள அடைப்பை சரிசெய்தல், மேலும் ஆள் இறங்கும் குழிகளை சாலையின் மட்ட அளவிற்கு உயர்த்துதல் மற்றும் சாலை பராமரிப்பிற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.5.37 கோடிக்கு அனுமதி வழஙகவும். மேலும் இதற்கான செலவினத்தை முழு மானியமாக வழஙக கோரியும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்க மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. அனுமதி வழஙகலாம்
2. பாதாள சாக்கடைத் திட்டம் சிப்பம் 1ல் உள்ள கழிவுநீர் குழாய்கள் மற்றும் ஆள் இறங்கும் குழிகளில் உள்ள அடைப்பை சரிசெய்து உயர்த்தினால் மட்டுமே இத்திட்டத்தினை முழுமையாக செயல்பாட்டுக்கு கொண்டுவர முடியும். எனவே மேற்படி உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.5.37 கோடிகளை இந்நகராட்சி நிதி நிலை மிகவும் பற்றாக்குறையாக உள்ளதால் நிதியை முழு மானியமாக வழஙகக் கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கலாம்.

**தீர்மான எண்:**481

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

2.தமிழ்நாடு அரசு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.IV) துறை அரசாணை (நிலை) எண். 73 மற்றும் 76 நாள். 19.07.2018 மற்றும் 26.07.2018 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அலுவலக கடிதம் ந.க.எண். 20555/2018/ஆர்1 நாள் 30.07.2018ன் படி 01.04.2018 முதல் சிவகங்கை நகராட்சியில் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் மேற்படி சொத்துவரி பொதுச்சீராய்வினை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக வரப்பெற்ற அரசாணை (நிலை) எண். 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.IV) துறை நாள் 19.11.2019 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர்

சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண். 40032/2012/ஆர்1 நாள் 20.11.2019ஐ மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு**</u>

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண்..1881/2018/அ1

**தீர்மான எண்:**482

**தீர்மானம்:** பதிவு செய்யப்பட்டது.

தனி அலுவலர்
சிவகஙகை நகராட்சி

# சிவகங்கை நகராட்சி

## அவசரக்கூட்டம்

2019ம் ஆண்டு நவம்பர் 22ம் நாள் விகாரி வருடம் கார்த்திகை 6ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு தனி அலுவலர் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

**தலைமை திரு.பி.அயூப்கான், பி.காம்.,எம்.ஏ.,பி.எட்.,**

**ஆணையாளர் (ம) தனி அலுவலர்,**

**சிவகங்கை நகராட்சி.**

# பொருட்கள்

**1.** இந்நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையம் உள்புறம் உள்ள கடை எண்..4ன் குத்தகை உரிமம் திரு. A.பாண்டி என்பவருக்கு 2015—2016ம் ஆண்டில் மாத வாடகை ரூ.1539/— என நிர்ணயம் செய்யப்பட்டு குத்தகை உரிமம் வழஙகப்பட்டு வந்தது. பல்வகை வரவின கேட்பு பதிவேட்டில் உரிமதாரர் திரு. A.பாண்டி என்பவருக்கு பதிலாக தவறுதலாக திரு. S.பாண்டி என பெயர் மாற்றம் செய்யப்பட்டதை எதிர்த்தும், கடையை திரு. A.பாண்டி என்பவரிடமிருந்து உள்வாடகைபெற்று கடை நடத்தி வந்த திரு. S.பாண்டி கணினியில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு அவரது பெயரில் கடை வாடகை செலுத்தி கடையின் குத்தகை உரிமம் தனக்கே உள்ளது என தெரிவித்தன் பேரில் குத்தகை உரிமம் பெற்ற திரு. A.பாண்டி என்பவர் இறந்துவிட்ட படியால் கடையின் உரிமம் பெற்ற திரு. A.பாண்டியின் வாரிசுதாரரும் உள்வாடகைக்கு கடை நடத்தி வந்த திரு. S.பாண்டி என்பவருக்கு கடையின் உரிமம் கோரி சென்னை உயர்நீதி மன்றம் மதுரைகிளையில் தொடர்ந்த வழக்கு எண்..டபிள்யூ.பி.(எம்.டி) எண்..262/2016 நாள்..15.04.2016ம் தேதிய தீர்ப்பில் மேற்கண்ட கடையை பொது ஏலம் நடத்த உத்திரவிட்டதை தொடர்ந்து நகராட்சி சிவகஙகை திரு. எஸ். ராஜசேகரன் அவர்கள் மூலம் 28.05.2016ம் தேதிய சட்டகருத்துருவின் படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 06.06.2016ம் தேதி அறிவிக்கப்பட்டு 24.06.2016ம் தேதி பொது ஏலம் நடைபெற்றது. மேற்படி தினத்தன்று நடைபெற்ற பொது ஏலத்தில் திரு.எஸ்.பாண்டி 2. திரு.பெ.முருகேசன் 3.திருமதி.ஆர்.கோமதி மூவரும் கலந்து கொண்ட பொது ஏலத்தில் திரு. S.பாண்டி என்பவர் கோரிய அதிகபட்ச மாத வாடகை ரூ.29300/—ஐ இவ்வலுவலக நகர்மன்ற தீர்மான எண்..2076 நாள்..12.08.2016 ஒப்புக்கொண்டு திரு. S.பாண்டி என்பவருக்கு இவ்வலுவலக செயல்முறை உத்திரவு கடிதம் 2525/2015/அ2 நாள்..20.02.2017ம் தேதி முதல் கடையின் குத்தகை உரிமம் வழஙகப்பட்டது. குத்தகை விதிகளின்படி 24.08.2016 முதல் 31.03.2017 வரை 7 மாத காலத்திற்குரிய வாடகை ரூ.2,05,100/—ஐ செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டதில் திரு. S.பாண்டி என்பவர் ரூ.50,000/—த்தை மட்டும் செலுத்தியதன் பேரில் மீதித்தொகை ரூ.1,55,100/—ஐ செலுத்த திரு.எஸ்.பாண்டி என்பவருக்கு அறிவிப்பு கடிதம் வழஙகப்பட்டது. அறிவிப்பு பெற்ற பிறகு திரு. S.பாண்டி என்பவர் ரூ.80,000/—க்கான IDBI வஙகி வரைவோலையாக ஆகமொத்தம் ரூ.1,30,000/—மட்டும் செலுத்தப்பட்டது. அதன் பின்னர் ரூ.75,100/— இவ்வலுவலக ரசீது எண்..002823 நாள்..16.02.2017ல் செலுத்தியுள்ளார். வாடகை உயர்வினை எதிர்த்து திரு. S.பாண்டி என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கு எண்..டபிள்யூ(பி.எம்டி) எண்..17468/2017 எண்ணிட்ட வழக்கின் இடைக்கால தீர்ப்பில் 05.11.2017ம் தேதிக்குள் வாடகை பாக்கித்தொகை ரூ.4,14,888/—ல் 50% இரண்டு தவணைகளாக செலுத்தவும் முதல் தவணையில் (ரூ.1,03,722/—) 05.10.2017ம் தேதிக்கு முன்பாகவும் இரண்டாவது தவணைத் தொகை (ரூ.1,03,722/—) 05.11.2017க்கு முன்பாகவும் செலுத்த தீர்ப்பு பெறப்பட்டது. வாடகை பாக்கித் தொகையை செலுத்த திரு. S.பாண்டி என்பவருக்கு இவ்வலுவலகம் மூலம் 28.09.2017ம் தேதி பதிவுத்தபாலில் அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டது. கடையின் உரிமைதாரர் திரு. S.பாண்டி 09.10.2017 அன்று ரூ.50,000/—த்திற்கான இந்தியன் ஓவர்சியஸ் வஙகி மூலம் வஙகி வரைவோலையாக செலுத்திவிட்டு உயர்நீதி மன்ற உத்திரவினை மதிக்காமல் குறைவான தொகையை வாடகையை செலுத்தியுள்ளார்.

கடையின் குத்தகை உரிமம் வழஙகப்பட்ட 20.02.2017ம் தேதி முதல் வாடகை பாக்கியை செலுத்தாமல் இருந்த காரணத்தால் கடை பூட்டி சீல் வைக்கப்பட்டது. வாடகை பாக்கியை செலுத்த உரிமதாரர் திரு. S.பாண்டி என்பவருக்கு பதிவுத்தாலில் அறிவிப்பு கடிதம் வழஙகப்பட்டும் வாடகை பாக்கியை செலுத்தாமல் இருந்த காரணத்தால் நகராட்சிக்கு ஏற்படும் நிதி இழப்பினை கருத்தில் கொண்டு கடையின் குத்தகை உரிமத்தை ரத்து செய்து மறுஏலம் நடத்த நகராட்சி வழக்கறிஞரிடம் இவ்வலுவலக கடித ந.க.எண்..2525/2017/அ1 நாள்..17.07.2018ம் தேதிய கடிதத்தில் சட்டகருத்துரு வழஙகுமாறு கோரப்பட்டது. அதில் குத்தகைதாரர் திரு. S.பாண்டி நீதிமன்ற இடைக்கால உத்திரவை

மதிக்காமல் மீறியதற்காகவும் நகராட்சி வழக்கறிஞர் திரு.பி.சீனிவாஸ் அவர்கள் தனது 25.07.2018ம் தேதிய கடிதத்தின் உரிமத்தை ரத்து செய்து ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் நடத்த சட்டக்கருத்துரு வழஙகப்பட்டதின் பேரில் நகர்மன்ற தீர்மான எண்..415 நாள்..28.06.2019ல் பேருந்து நிலைய உள்புற கடை எண் 4க்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் பேரில் 27.08.2019,13.09.2019, 20.09.2019, 27.09.2019, 04.10.2019, 11.10.2019,18.10.2019 மற்றும் 01.11.2019 முறையே ஏலம் நடத்தப்பட்டதில் யாரும் ஏலம் கோருவதற்கு முன்வரவில்லை. இறுதியாக 19.11.2019ம் தேதியன்று மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு.து.கோபால், திரு. M.இராஜாஅமுதன் ஆகிய இருவரும் 27.08.2019ம் தேதியன்று செலுத்திய வைப்புத் தொகையினை வைத்துக் கொண்டு 19.11.2019ம் தேதியன்று நடைபெறும் மறு ஏலத்தில் கலந்து கொள்ள கேட்டுக் கொண்டதின் பேரில் 19.11.2019ம் தேதி நடைபெற்ற மறு ஏலத்தில் கலந்து கொண்டு கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி | தொகை |
|---|---|---|---|
| 1. | திரு. து.கோபால்,<br>1422,அண்ணா நகர்,<br>வந்தவாசிரோடு,<br>சிவகஙகை. | ஏலக்கேள்வி | ரூ.13,200/–<br>ரூ.13,700/–<br>ரூ.13,900/–<br>ரூ.14,200/– |
| 2. | திரு.M.இராஜாஅமுதன்,<br>2,மஜீத்ரோடு 2வது குறுக்குத் தெரு, சிவகஙகை. | ஏலக்கேள்வி | ரூ.13,500/–<br>ரூ.13,800/–<br>ரூ.14,000/–<br>ரூ.14,300/– |

இரண்டு பேரின் ஏலக்கேள்விகள் முறையில் அதிகபட்ட ஏலக்கேள்வித்தொகை ரூ.14300/– (பதினான்காயிரத்தி முன்னூறு) மட்டும் ஒப்புக்கொள்ளவும். எட்டு முறை ஏலம் விடப்பட்டும் யாரும் கடையினை ஏலம் கேட்க உரிமம் கோராததாலும், கடை எண்..4ன் அருகில் உள்ள கடை எண்..1 வரிவிதிப்பு எண்..2004103 மாதவாடகை ரூ.6797/–கடை எண்.2 வரிவிதிப்பு எண்..2004105 மாத வாடகை ரூ.8082/– கடை எண்..3 வரிவிதிப்பு எண்..2004106 மாதவாடகை ரூ.3849/– கடை எண்..5 வரி விதிப்பு எண்..2004130 மாத வாடகை ரூ.1848/– கடைஎண்..6 வரிவிதிப்பு எண்..2004128 மாத வாடகை ரூ.1471/–,தனியார் கடை வாடகை ரூ.5500/– ஆக குறைவாக இருப்பதாலும் கடை எண்..4க்குரிய மாதவாடகை ரூ.29,500/– அரசாங்க மதிப்பை காட்டிலும் கூடுதலாக யாரும் ஏலம் கேட்க முன்வராததாலும், நகராட்சிக்கு ஏற்படும் நிதி இழப்பினை கருத்தில் கொண்டு அரசாங்க மதிப்பில் உயர்ந்தபட்ச சராசரி மாத வாடகை ரூ.13,000/–ம் என நிர்ணயம் செய்ததை கருத்தில் கொண்டு உச்சபட்ச ஏலக்கேள்வி தொகையான ரூ.14,300/–ஐ மாதவாடகையாக ஏலம் கேட்ட திரு. M.ராஜாஅமுதன் அவர்களின் ஏலக்கேள்வியினை ஒப்புக்கொண்டு கடையின் குத்தகை உரிமம் வழஙகவும், வாடகை நிர்ணயம் செய்த தொகையில் மூன்று ஆண்டுகளுக்கு ஒவ்வொரு முறையும் 15% வாடகை உயர்த்தி நிர்ணயம் செய்யவும் உறுதி செய்ய மன்றபொருள் விரைவு ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

## அலுவலகக்குறிப்பு

பேருந்து நிலைய கடை எண்..4ன் குத்தகை உரிமத்தை சென்னை உயர்நீதி மன்ற நகராட்சி வழக்கறிஞரின் சட்டக்கருத்துருவின் படி 13.09.2019,20.09.2019,27.09.2019,04.10.2019, 11.10.2019,18.10.2019 மற்றும் 01.11.2019 ஆகிய தேதிகளில் ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் கோரப்பட்டதில் கடையின் உரிமத்தை உரிமம் கோர யாரும் முன்வராத காரணத்தால் இறுதியாக 19.11.2019ம் தேதி மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏற்கனவே இறுதியாக நிர்ணயம் செய்யப்பட்டு கடை எண்..4க்குரிய மாதவாடகை ரூ.29,500/– அரசாங்க மதிப்பை காட்டிலும் கூடுதலாக

யாரும் ஏலம் கேட்க முன்வராததாலும், நகராட்சிக்கு ஏற்படும் நிதி இழப்பினை கருத்தில் கொண்டு அரசாங்க மதிப்பில் கடை எண்..4க்கு அருகில் உள்ள கடை எண்..1ன் மாத வாடகை ரூ.6797/— கடை எண்..2ன் மாதவாடகை ரூ.8082/— மற்றும் கடை எண்..3ன் மாதவாடகை ரூ.3849/— கடை எண்..5ன் மாதவாடகை ரூ.1848/— கடைஎண்..6க்கு மாதவாடகை ரூ.1471/—ஆக தனியார் கடை வாடகை ரூ.5500/— குறைவாக இருப்பதாலும், கடை எண்..4க்குரிய மாத வாடகை அரசாங்க மதிப்பில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வித் தொகையான ரூ.13,000/— என நிர்ணயம் செய்ததை கருத்தில் கொண்டு உட்சபட்ச ஏலக்கேள்வித் தொகையை கேட்டுள்ள திரு. M.இராஜாஅமுதன் ஏலக்கேள்வித் தொகை ரூ.14,300/—ஐ ஒப்புக்கொண்டு கடையின் குத்தகை உரிமம் வழஙகவும், மாதவாடகை நிர்ணயத்தொகையில் மூன்று ஆண்டுகளுக்கு ஒவ்வொரு முறையும் 15% என வாடகை உயர்த்தி நிர்ணயம் செய்யவும் மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

**தீர்மான எண்:483**

**தீர்மானம்:**அனுமதிக்கப்பட்டது.

2. இந்நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட நான்கு வணிக தார்சு கடைகள் மூன்று கழிப்பறைகள் 2019 பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 27.08.2019 அன்று நடைபெற்றது. நான்கு வணிக தார்சு கடைகளில் மூன்று வணிக தார்சு கடைகளும் மற்றும் ஒரே ஒரு கழிப்பறையும் ஏலம் எடுக்கப்பட்டது. எஞ்சிய ஒரு கடை மற்றும் இரண்டு கழிப்பறைகளுக்கு முறையே 13.09.2019,20.09.2019,27.09.2019,04.10.2019, 11.10.2019,18.10.2019, 01.11.2019 மற்றும் 19.11.2019 அன்று நடைபெற்றதில் ஒரு கடை மட்டும் ஏலம் எடுக்கப்பட்டது. மீதமுள்ள இரண்டு கழிப்பறைகளுக்கு ஏலம் நடைபெற்றதில் (ஒன்பதாவது அழைப்பு) ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி எதுவும் வரப்படவில்லை. எனவே ஏலப்பட்டியலிருந்து நீக்கம் செய்யலாம். அதனை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்:484**

**தீர்மானம்:**அனுமதிக்கப்பட்டது.

3. சிவகஙகை நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோக பராமரிப்பு பணியில் மொத்தம் 8 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் உள்ளது. அவற்றை முறையாக மாதம் இருமுறை சுத்தம் செய்து பராமரிப்பதற்கு பிளீட்சிங பவுடர் அவசியம் தேவைப்படுகிறது. மேலும் மழை காலமாக இருப்பதாலும் பொது மக்களுக்கு தொற்று நோய் ஏதுவும் பரவாமல் தடுப்பதற்கும் குடிநீர் பிரிவில் பிளீட்சிங பவுடர் வாஙகி இருப்பில் வைத்துக் கொள்ளவும் அவசியமாகிறது. எனவே 1.00 மெட்ரிக் டன் பிளீட்சிங பவுடரை பாரத் மார்கெட்டிஸ் எண்டர்பிரைசஸ் திருச்சி நிறுவனத்திடம் வாஙகி கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்:485**

**தீர்மானம்:**அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர்
சிவகஙகை நகராட்சி

# <u>சிவகங்கை நகராட்சி</u>

## <u>சாதாரணக்கூட்டம்</u>

2019ம் ஆண்டு நவம்பர் 25ம் நாள் விகாரி வருடம் கார்த்திகை 9ம் நாள் திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு தனி அலுவலர் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

**தலைமை திரு.பி.அயூப்கான், பி.காம்.,எம்.ஏ.,பி.எட்.,**

**ஆணையாளர் (ம) தனி அலுவலர்,**

**சிவகங்கை நகராட்சி.**

# <u>பொருள்கள்</u>

**1.** சிவகங்கை நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையம் எதிரில் உள்ள நகராட்சி கட்டிடத்தில் உள்ளாட்சி நிதித் தனிக்கை உதவி இயக்குநர் அலுவலகம் செயல்பட்டு வந்தது. தற்போது மேற்படி அலுவலகம் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாக கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனால் நகராட்சிக்குச் சொந்தமான கட்டிடத்தை நகராட்சி வசமே ஒப்படைப்பு செய்வதாக உள்ளாட்சி நிதித் தனிக்கை உதவி இயக்குநர் அலுவலக கடித ந.க.எண்.783/அ1/2019, நாள்.08.11.2019 ம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் சிவகங்கை நகராட்சியில் பணிபுரியும் ஆணையாளருக்கு ஆணையாளர் குடியிருப்பு ஏதும் இல்லாததால் மேற்படி காலியாக உள்ள கட்டிடத்தை ஆணையாளர் குடியிருப்பாக பயன்படுத்திக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

அனுமதி வழஙகலாம்.

**தீர்மான எண்:486**

**தீர்மானம்:**அனுமதிக்கப்பட்டது.

**2.** இந்நகராட்சி ஒப்பந்தக்காரர்கள் குத்தகைதாரர்கள் மற்றும் பணியாளர்களிடம் பிடித்தம் செய்யப்பட்டு வருமானவரி கணக்கில் செலுத்தப்படும் வருமான வரி தொகைக்குரிய கணக்கினை E.Return மூலம் தாக்கல் செய்ய வேண்டும். இந்நகராட்சியில் 2018–19,2018–19 மற்றும் 2019–20 ஆண்டிற்கு 4 காலாண்டுகளுக்கும் ஒரு காலாண்டுக்கு தலா 2000/– வீதம் (12X2000) தொகை ரூபாய் 24000/– செலவாகும் இதற்கென காரைக்குடியில் உள்ள பட்டய கணக்கர் திரு.பரத்வாஜ், த/பெ.துவரகநாத் அவர்களிடம் நம் நகராட்சி E.ரிட்டன் பணி செய்யது தொகை வழஙகவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து வழஙக அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்:487**

**தீர்மானம்:**அனுமதிக்கப்பட்டது.

**3.** இந்நகராட்சியிலிருந்து செலுத்ப்பட்டு வரும் தணிக்கை கட்டணம் 2016–17 மற்றும் 2017–18 ஆகிய ஆண்டுகளுக்கு தொகை ரூ.85763/– செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து வழஙக அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்:488**

**தீர்மானம்:**அனுமதிக்கப்பட்டது.

4. சிவகஙகை நகராட்சியில் கணினி அறையில் இயங்கி வரும் கணினிகள் அனைத்தும் UPS வயரிங இல்லாமல் நாளது தேதி வரை Lighting Current-ல் இயங்கி வருகிறது. மேலும் Earth Pit அமைப்பு இல்லாமல் உள்ளது.

ஆகவே, நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணினிகளுக்கான வயரிங் மிகவும் மோசமான நிலையில் உள்ளதாலும், அலுவலகத்தில் இயங்கி வரும் சுமார் 20 கணினிகள், மோடம் ஆகியவை Lighting Current-ல் நேரடியாக இயங்கி வருவதாலும் **மின் துண்டிப்பு வரும் பொழுதும், ஜென்செட் இயக்கும் / ஆப் செய்யும் பொழுதும் அடிக்கடி கணினிகளுக்கு அதிகப்படியான மின்சாரம் செலுத்தப்பட்டு கணினிகள் அடிக்கடி பழுதாகி வருகிறது. மேலும் ஏற்கனவே, கணினியில் மேற்கொண்ட பதிவுகள் மற்றும் கோப்புகள் அனைத்தும் அழிந்து விடவும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளது.**

ஆகவே, கணினிகள் அனைத்திற்கும், தனியாக Circuit Wiring செய்து அதில் 4Sq.mm core Aluminum cable, 2.52 mm copper coil, 63 Amps MCB, INPUT, 32 Amps MCB output ஆகியவை பயன்படுத்தி Wiring செய்து கொடுக்கவும் மேலும் Earth Pit அமைப்பு ஏற்படுத்தவும் அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.1.35 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தற்போது உள்ளாட்சி தேர்தல் வரவுள்ளது. அதனால், அவசர அவசியம் கருதி இப்பணியை விரைந்து முடித்து தேர்தல் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்:489**

**தீர்மானம்:**அனுமதிக்கப்பட்டது.

**5.**சிவகஙகை நகராட்சி கணினி பிரிவுக்கு புதியதாக வாஙகப்பட்ட **10** கேவிஏ யுபிஎஸில் இருந்து அனைத்து கணினிகளையும் இணைக்கும் வகையில் வயரிங வேலைக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.**1,35,000/—**த்திற்கு (ஒரு லட்சத்து முப்பத்தி அய்ந்தாயிரத்திற்கு) இந்நகர்மன்ற தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள் **04.11.2019** ன் படி நிர்வாக அனுமதி வழஙகியுள்ளது. மேற்காணும் பணிக்கு **20.11.2019**ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1. | திருவாளர்கள். விக்டரி சிஸ்டம் சர்விஸ் சிவகாசி | 0.39% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| 2. | திருவாளர்கள். ஜெனியூன் கம்ப்யூட்டர்ஸ் சிஸ்டம்ஸ் அண்டு பெரிபெரல்ஸ், சிவகாசி | 0.64% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:—**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவாக வழஙகியுள்ள திருவாளர்கள். விக்டரி சிஸ்டம் சர்விஸ், சிவகாசி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. வேலையின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழஙகலாம்.

**தீர்மான எண்:490**

**தீர்மானம்:**அனுமதிக்கப்பட்டது.

6. சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம் 2019–20ன் கீழ், சிவகஙகை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்..20, மதுரை சாலை முதல், முதல் தெருவில் மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/–த்திற்கு (ஐந்து இலட்சத்திற்கு) சுமார் 200 மீட்டர் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணிக்கு 15.11.2019ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1. | திருமதி.மெகராஜ்பானு, கான்ட்ராக்டர், சிவகஙகை. | 0.06% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| 2. | திரு.எம்.கண்ணன், கான்ட்ராக்டர், சிவகஙகை. | 3.44% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:–**

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவாக வழஙகியுள்ள ஒப்பந்ததாரர் திருமதி.மெகராஜ்பானு, சிவகஙகை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்:491**

**தீர்மானம்:**அனுமதிக்கப்பட்டது.

7. சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம் 2019–20ன் கீழ், சிவகஙகை நகராட்சிக்குட்பட்ட தெப்பக்குளம் அருகில் உள்ள அஙகன்வாடி கட்டிடத்திற்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.1,00,000/–த்திற்கு (ஒரு இலட்சத்திற்கு) சுற்றுச்சுவர் மற்றும் கேட் அமைத்தல் பணிக்கு 15.11.2019ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1. | திருமதி.மெகராஜ்பானு, கான்ட்ராக்டர், சிவகஙகை. | 0.16% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| 2. | திரு.எம்.கண்ணன், கான்ட்ராக்டர், சிவகஙகை. | 2.24% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:–**

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவாக வழஙகியுள்ள ஒப்பந்ததாரர் திருமதி.மெகராஜ்பானு, சிவகஙகை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்:492**

**தீர்மானம்:**அனுமதிக்கப்பட்டது.

8. சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம் 2019–20ன் கீழ், சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்..26, அகிலாண்டபுரம் மற்றும் கக்கன் பாக்கம் மேற்குப் பகுதியில் மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/–த்திற்கு (ஐந்து இலட்சத்திற்கு) பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணிக்கு 15.11.2019ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1. | திரு.முருகேசன், கான்ட்ராக்டர், சிவகஙகை. | 0.02% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2. | திரு.என்.ஆனந்த், கான்ட்ராக்டர், சிவகஙகை. | 3.64% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.02% அதிகமாக வழஙகியுள்ள ஒப்பந்ததாரர் திரு.முருகேசன், சிவகஙகை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்:**493

**தீர்மானம்:**அனுமதிக்கப்பட்டது.

9. சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம் 2019–20ன் கீழ், சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்..16, வினோபா தெரு மற்றும் குலோத்துஙகன் தெருவில் மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/–த்திற்கு (ஐந்து இலட்சத்திற்கு) பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணிக்கு 15.11.2019ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1. | திரு.என்.மாரியப்பன், கான்ட்ராக்டர், சிவகஙகை. | 0.001% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| 2. | திரு.எம்.கண்ணன், கான்ட்ராக்டர், சிவகஙகை. | 3.67% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவாக வழஙகியுள்ள ஒப்பந்ததாரர் திரு.என்.மாரியப்பன், சிவகஙகை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்:494**

**தீர்மானம்:**அனுமதிக்கப்பட்டது.

10. சிவகஙகை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு, தற்பொழுது வடகிழக்கு பருவமழை காலம் தொடஙகியுள்ளதால் சிவகஙகை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நோய் தடுப்பு பணிகள் மற்றும் பொது சுகாதாரப் பணிகள் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளவும், நகர் பகுதியில் உள்ள பொதுக்கழிப்பிடஙகள் மற்றும் சமுதாய கழிப்பிடஙகள், பேருந்து நிலையம், தினசரி மார்கெட், நகரின் முக்கிய இடஙகளில் பொது சுகாதாரப்பணிகள் மேற்கொள்ளவும், டெஙகு காய்ச்சல் நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ளவும் கிருமி நாசினியான பிளீச்சிங பவுடர் தேவைப்படுகிறது. எனவே, நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ளவும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஆறு மாத கால அளவிற்கு தேவையான 4000 கிலோ பிளீச்சிங பவுடர் கொள்முதல் செய்து பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

அனுமதி வழஙகலாம்

**தீர்மான எண்:495**

**தீர்மானம்:**அனுமதிக்கப்பட்டது.

11. சிவகஙகை நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், அலுவலக உதவியாளர்கள், துப்புரவு பணியாளர்கள் ( ஆண்கள் மற்றும் பெண்கள்), அலுவலக இரவு காவலர்கள், லாரி துலக்குநர், ஆகியவர்களுக்கு 2019–20ம் ஆண்டிற்கு சீருடைகள் வாஙகி வழஙகவும், அதற்குண்டான தையற்கூலி உட்பட உத்தேச செலவினம் தொகை ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. அனுமதி வழஙகலாம்
2. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்:496**

**தீர்மானம்:**அனுமதிக்கப்பட்டது.

12.இந்நகராட்சியில் நோய் தடுப்பு பணிகள், டெஙகு தடுப்பு பணிகள் மற்றும் பொது சுகாதார பணிகள் மற்றும் பொதுசுகாதார பணிகளை மேற்கொள்ள 4000 கிலோ அளவில் பிளீச்சிங பவுடர் தேவைப்படுவதால் இது தொடர்பாக 08.11.2019 அன்று குறுகிய கால விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட மூன்று நிறுவனஙகளிலிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலை விபரம் |
|---|---|---|
| 1 | Bharath Marketing Enterprises, Thanjavur | 25kg ரூ.1664/– |
| 2 | Vel Groups, Chennai-99 | 25kg ரூ.1758/– |
| 3 | Jai Agencies, Trichy-2. | 25kg ரூ.1723/– |

**அலுவலக குறிப்பு–**

வரப்பெற்ற மூன்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைக்காட்டிலும் குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள Bharath Marketing Enterprises, Thanjavur நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்:497**

**தீர்மானம்:**அனுமதிக்கப்பட்டது.

13. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொசுக்களால் உருவாகும் டெஙகு, மலேரியா மற்றும் சிக்கன் குன்யா, போன்ற தொற்று நோய்கள் பரவாகத் தடுக்கும் பொருட்டு முன் எச்சரிக்கையாக நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள மழைக்காலம் தொடஙக உள்ளதால் பொது சுகாதாரத்தின் அவசர அவசியத்தை முன்னிட்டு 3 மாத கால அளவிற்கு தேவையான கொசுப்புழு மற்றும் கொசுக்களை அழிக்கும் மருந்துகளான அபேட் –80 லிட்டர், பைரிந்ததிரம்–125 லிட்டம், மற்றும் B.T Powder – 60 கிலோ ஆகியவற்றை அரசு நிறுவனமான "Tamil Nadu medical Service Corporation Ltd, Chennai" நிறுவனத்தின் அஙகீகாரம் பெற்ற M/S. ARUNAI Enterprises, Chennai என்ற நிறுவனஙகளிடம் இருந்து கொள்முதல் செய்யவும், அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.3,00,000/– (மூன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. பொது சுகாதர அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதியை நோக்கி மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்

**தீர்மான எண்:498**

**தீர்மானம்:**அனுமதிக்கப்பட்டது.

14. சிவகஙகை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிப்பறைகளை பராமரித்தல் மற்றும் பள்ளி வளாகத்தில் துப்புரவு பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள அரசாணை (நிலை) எண் 166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை நாள் 23.11.2016ன் படி உள்ளாட்சி மன்றஙகளுக்கு பொருப்புகள் வழஙகப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கு பணியாளர்களை நியமனம் செய்து பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் அதற்குண்டான செலவினத்தை ஊராட்சி மன்றஙகள் வசிக்கும் கல்வி நிதியின் மூலம் மேற்கொள்ளவும் அரசாணையில் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 3 அரசு பள்ளிகள் , 3 நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிவறை பராமரிப்பு பணி பள்ளி வளாக பராமரிப்பு பணி மற்றும் துப்புரவு பணிகளை மேற்கொள்வதற்கும் அரசாணையின்படி 4 பெண் பணியாளர்கள், 2 ஆண் பணியாளர்கள் மொத்தம் 6 துப்புரவு பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ளவும், 01.10.2019முதல் 31.12.2019 வரை ஓராண்டு காலத்திற்கு திரு.பி.மோகன் ஒப்பந்ததாரருக்கு பணியை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே பணி காலம் முடிவடைந்து விட்டதால் 3 மாதஙகளுக்கு காலநீட்டிப்பு செய்யவும் மேலும் பணிகளை ஏற்கனவே வழஙகிய அதே ஊதிய

விகிதத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செந்தர விகிதப்படி தினக்கூலி அடிப்படையில் 6 துப்புரவு பணியாளர்களை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**

பொது சுகாதார அவசியம் கருதி பணியை மேற்கொள்ளவும், மேற்கண்ட செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்:**499

**தீர்மானம்:**அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர்
சிவகஙகை நகராட்சி